

# வித்யா சுப்ரமணியன்

- சென்னையின் சாம்பியன் - கல்வி

கலை ஒருவரின் வாழ்க்கை தன்மையையே மாற்றக் கூடியது. நாம் கேள்வி கேட்கவும், எதையும் எதிர்கொள்ளவும், உலகை பற்றி நான் என்ன நினைக்கிறோம் என்று ஆய்வு செய்து சவால் விடவும் நமக்கு ஒரு சக்தியைக் கொடுக்கிறது. கலை நம்மை மாற்றுவதோடு, நமக்கு தன்னம்பிக்கையைக் கொடுத்து, நம் மன உறுதியை அதிகரித்து, சாதாரணமானவர்களிடமிருந்து நம்மை தூக்கி நிறுத்தி, நாம் உயர் நிலைக்கு செல்வதற்கு நம்மை தூண்டி அதை நோக்கித் தள்ளுவது, நம்பிக்கைக் கொடுத்து, அமைதிக்கான வழிக் கண்டுப்பிடித்து அதில் ஓய்வு எடுக்கவும் வழி வகுக்கிறது. அப்படி இருக்க, அந்த கலையை நமக்குள் கொண்டு வர நம்மை ஊக்குவிக்கும் ஒருவரைப் பற்றி என்ன சொல்வது?

அப்படிப்பட்ட ஒருவர் தான் வித்யா சுப்ரமணியன். கலை என்பது கலைக்காக மட்டும் அல்ல, கலை குடி இருக்கும் நபருக்கும் சேர்த்து தான் என்று நம்புபவர்.

2020-21மற்றும் பான்டெமிக், கற்றலையும் கற்பித்தலையும் ஆன்லைன் மூலம் நம் வீட்டுக்கு கொண்டு வந்துள்ளது. நம்மில் பலர் அத்தியாவசியத்தை முன்னிட்டு, ஸூம் மற்றும் கூகிள் மீட் பற்றித் தெரிந்து கொண்டுள்ளோம். பள்ளி கல்வி ஆகட்டும், பாட்டு வகுப்புகள், நடன வகுப்புகள், இசை அல்லது மீட்டிங்குகள் என அனைத்தும் ஆன்லைன் மயமானது. பான்டெமிக் இவற்றை அத்தியாவசியப்படுத்தியது. ஆனால், நாம் பேசுவது பான்டெமிக் வருவதற்கு பல வருடங்களுக்கு முன்பு 2003-ல், பிறகு முறையாக 2010-லேயே, வித்யா சுப்ரமணியன் ஸ்கைப் மூலம் இசை வகுப்புகள் தொடங்கினார்.

லால்குடி ஸ்ரீ ஜெயராமன் அவர்களின் சிஷ்யையான வித்யா ஒரு தேர்ந்த கர்நாடக பாடகி ஆவார். தற்போது பல நிலையில் இருக்கும் பிள்ளைகளுக்கு ஆன்லைனில் பாட்டு வகுப்புகள் நடத்துகிறார். அவரின் 'வித்யா சுப்ரமணியன் அகாடமி' நேரடி ஆன்லைன் வகுப்புகள் மூலம் கர்நாடக இசை, இசை கருவிகள் - புல்லாங்குழல், வீணை. வயலின், பெர்கஷன் மற்றும் ஹிந்துஸ்தானி பாட்டு, பரதம், யோகா, சமஸ்கிருத மொழி மற்றும் ஸ்லோகம், தமிழ் மற்றும் தெலுங்கு மொழி ஆகியவற்றை பத்து வருடங்களுக்கு மேலாக பயிற்றுவிக்கிறது. வித்யா, மிக்க அனுபவம் கொண்ட தரமான ஆசிரியர்கள் பலர் கொண்ட குழுவை நியமிப்பதோடு, அவருக்கு உலகம் முழுவதும் பல வகையான மாணவர்கள் இருக்கிறார்கள். வித்யா சுப்ரமணியன் அகாடமி, மாணவர்களின் விருப்பத்தை முன்னிலைப்படுத்தி ஆன்லைன் கார்நாடக இசை வகுப்புகள் எடுப்பதில், ஒரு சர்வதேச அகாடமியாக உருவாகியுள்ளது.
வித்யா, இசையில் அவருக்கு இருக்கும் ஆழ்ந்த அறிவும் மற்றும் கர்நாடக இசையை கற்பிக்கும் கலையில் அவர் கொண்ட பயிற்சியும் கொண்டு பல தரப்பட்ட மாணவர்களுக்கு ஏற்றவாறு ஆன்லைன் வகுப்புகளை தொகுத்தார். இசை நுணுக்கங்களை மிக அழகாக தொகுத்து, கற்றுக் கொள்ள சுலபமான முறையில் வடிவமைக்கப்பட்டு இருக்கும் இந்த இசை கலையில் பயிற்சி எடுத்துக் கொள்ள, உலகின் பல்வேறு இடங்களில் இருக்கும் மாணவர்கள் வித்யாவை தொடர்பு கொள்கின்றனர்.

வித்யா ஒரு சார்டட் அக்கவுண்டன்ட் மற்றும் பாஸ்டன் கல்லூரி எம்.பி.ஏ - ஃபினான்ஸ் பட்டதாரி. குடும்பத்துடன் நேரம் செலவிட, ஒரு வருடம் வேலையை விட்ட அவர், வீட்டிலிருந்து ஸ்கைப் மூலம் இசை பயிற்றுவிக்க முடிவு செய்தார். தோழமை அணுகுமுறையோடு கற்றுக் கொடுக்கும் அவரின் தன்மையால் ஈர்க்கப்பட்ட அவரின் மாணவர்கள் கொடுத்த ஊக்கத்தினாலும், வெளி நாட்டில் இருக்கும் மாணவர்கள் காட்டிய ஆர்வத்தினாலும், கர்நாடக இசையை முறையாக கற்பிக்கவும், கற்றலுக்குமான வழிமுறைகளை தொகுக்க வேண்டும் என்று நினைத்தார். அப்படி தான் தொகுக்கவிருக்கும் திட்டமானது, தன் குருவிடம் கற்றவற்றையும், தான் உயர்கல்வியில் கற்றதையும் கொண்டு, தேவைக்கு ஏற்ப மாற்றி வடிவமைக்கவும், கற்பவர்களுக்கு ஒரு தனிப்பட்ட இனிய அனுபவம் கொடுக்கவும் ஏதுவாக இருக்க வேண்டும் என்று முடிவு செய்தார்.
ஆனால், இவ்வளவும் தான் தனியாக செய்ய இயலாது என்று புரிந்துக் கொண்ட அவர், ஒரு திறமைசாலி வல்லுனர்கள் கொண்ட குழுவை ஒன்று சேர்த்தார். இன்று அது ஒரு வலுவான ஆலமரமாக வளர்ந்துள்ளது.

தொடக்கத்தில், கர்நாடக சங்கீதத்தை ஆன்லைன் வகுப்புகள் மூலம் கற்றுக் கொள்வது, நேருக்கு நேர் கற்றுக் கொள்வது போல் சிறப்பாக, பயனுள்ளதாக இருக்குமா என்று நிறைய சந்தேகங்கள் இருந்ததாக, வித்யா சொல்கிறார். ஆனால், ஆசிரியர்களுக்கு இது போல் கற்பிப்பதற்கான தேவை இல்லாததால், இந்த சந்தேகம் இருந்ததாகவும் சொல்கிறார். ஆன்லைன் மூலம் சொல்லிக் கொடுக்கும் முறைகள் நேருக்கு நேர் சொல்லிக் கொடுப்பதை போல் இருக்க முடியாது. எனவே, அவர் கற்பித்தலை எப்படியெல்லாம் செம்மைப்படுத்தலாம், ஆசிரியர்களை இந்த புதிய வழிமுறைகளுக்கு ஏற்ப பொருத்த எப்படி பயிற்சி கொடுக்கலாம் என்றெல்லாம் படிக்க ஆரம்பித்தார். ஆசிரியர்களுக்கு அவர்களை அவர்களே புரிந்து கொள்ள இது ஒரு நல்ல வாய்ப்பு என்றும் நினைத்தார். ஒரு நல்ல ஆசிரியரை தேர்வு செய்வதற்கு



முன், அவரின் ஆர்வம், பேச்சுத் திறன், நெறிமுறைகள், கணிணி அனுபவம் என எல்லாவற்றையும் நேர்காணலில் அறிந்து,



அப்படி தேர்வு செய்யப்பட்டவருக்கு 2 மாதம் பயிற்சி கொடுத்த பின்பே, அவர் மாணவர்களுக்கு பயிற்சி அளிக்க முடியும். ஆசிரியர்களும் தொடர்ச்சியாக அவருக்கு அவ்வப்போது ஆலோசனைகள் கொடுக்க, வித்யா அவர் தொகுத்த திட்டத்தை அதற்கேற்ப மாற்றினார். வித்யாவின் எதையும் கனகச்சிதமாக செய்யும் திறனும், அவரின் சீரிய செயல்திறனும், சர்வதேச அனுபவமும், எதையும் முழுமையாக செய்யும் ஆற்றலும், அவரை சர்வதேச அளவில் கர்நாடக சங்கீதத்தின் மிகவும் நாடப்பட்ட ஆசிரியராக விளங்கினார். வித்யா சுப்ரமணியன் அகாடமி அனைத்து வயதினர், எந்த இடம், நிலை என்றாலும் அவர்களை வரவேற்றது. ஒவ்வொரு மாணவணின் கற்கும் லட்சியம் அறிந்து அவருக்கு ஏற்ப கற்றுக் கொடுத்து அவர்களை வெற்றிப்பாதையில் கொண்டு செல்லும் மிக்க திறமையான ஆசிரியர்களுக்கு வித்யா தலைவராக இருந்தார். அவரின் ராகரசிகா பாட்காஸ்ட் கேட்டு ஈர்க்கப்பட்ட அவரின் சர்வதேச இசை ரசிகர்கள், இந்த தெய்வீக கலையைக் கற்றுக் கொள்ள அவரை நாடினர். வித்யா குழுவில் இருந்த அனுபவமிக்க ஆசிரியர்கள், இசைக் கருவிகள் கூட ஆன்லைன் மூலம் சொல்லிக் கொடுத்தனர். இதனால், சுயமரியாதை, நல்ல தோழமையுடன் திறமையான ஆசிரியர்கள் கொண்ட குழு வளர்ந்து மட்டுமன்றி, ஆசிரியர்களுக்கு நல்ல வருவாயும் கிட்டியது.

அவர் மனவளர்ச்சி குன்றிய மாணவர்களுக்கும் வகுப்புகள் ஆரம்பித்து, கொஞ்சம் கொஞ்சமாக, கிடைத்த ஆலோசனைகள் கொண்டு இன்னும் நிறைய வகுப்புகள் கூட்டினார். மற்றவர்களிடம் இருந்து கிடைக்கும் ஆலோசனைகள் தான் இந்த வகுப்புகள் மேலும் மேலும் வளர உதவியது. அனைத்தும் ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் கொடுத்த ஆலோசனைகளே ஆகும். பண்பாட்டு பிண்ணனியோடு இருக்கும் எதுவுமே தான் இவர்கள் அகாடமியின் முக்கிய நோக்கமாகும். உலக அளவில் 1500 மாணவர்கள் இருக்கின்றனர், இன்னும் வளர்ந்து கொண்டிருக்கிறது. அவரின் வளர்ச்சி முழுவதும் வாய்வழி வளர்ந்தே அன்றி, எந்த ஒரு விளம்பரமும் இதுவரை செய்ததில்லை என்று வித்யா சொல்கிறார்.

வித்யா, தான் ஒவ்வொரு இசை சீசனிலும் இசை நிகழ்ச்சிகள் செய்வதை விட, திறமை மற்றும் நல்ல குரல் கொண்ட மாணவர்களை கண்டறிந்து, அவர்களுக்கு பயிற்சி கொடுத்து, அவர்கள் திறமையை வெளிக் கொணர்வதே அகாடமியின் மிக முக்கிய நோக்கமாக இருக்க வேண்டும் என்று விரும்புகிறார். குடும்பத்துக்கு வேண்டியவற்றையும் நிறைவேற்றி, தன்னால் என்ன முடியுமோ அதை செய்கிறார். பாடி பிரபலமாக இருப்பதை விட, பாடகர்களை உருவாக்குவது மன நிறைவைத் தருகிறது என்று சொல்கிறார். தகுதியானவர்களுக்கு, முக்கியமாக பெண்களுக்கு வீட்டிலிருந்தபடியே வேலை செய்யும் வேலை வாய்ப்பு உருவாக்க முடிகிறது என்றும் சொல்கிறார். அவர் நகரம் மற்றும் கிராமப்புரம் இருக்கும் திறமை, ஆர்வம் மற்றும் பொறுப்பான ஆசிரியர்களுக்கு பயிற்சி கொடுத்துள்ளார். அதோடு, மாணவர்களின் அறிவுத்திறன், லட்சியத்திற்கு ஏற்ப வகுப்புகளை மாற்றும் சுதந்திரமும் கொடுத்துள்ளார். இந்த ஆசிரியர்களின் வாழ்வில் ஏற்பட்டிருக்கும் மாற்றமே அவரின் சமூக தொழில்மேடையின் முக்கிய தொலைநோக்கு பார்வை என்று வித்யா நம்புகிறார்.

அவரின் பார்வை டிஜிட்டல் ப்ளாட்ஃபார்மில் இருப்பதால், டிஜிட்டல் இணைப்பு இல்லாதவர்கள் இலவசமாக தானே படிக்க ஏதுவாக, வித்யா மிக அதிகமாக யூ டியூபில் இசை பற்றிய தொகுப்புகளை போட்டுள்ளார். 500,000 பார்வையாளர்கள் இருப்பது இன்னும் நிறைய செய்ய அவரை ஊக்குவிக்கிறது. சங்கீதம் ஆன்லைனில் சொல்லி கொடுப்பது அவரின் முக்கிய நோக்கமாக இருக்கும் பட்சத்தில், தானே கற்றுக் கொள்ள நினைக்கும் மாணவர்களுக்கு வீடியோஸ், அவர்களின் லட்சியம் அடைய அவர்களுக்கு வழிகாட்டுவது, அவர்களுக்கு ஆலோசனை வழங்குவது ஆகியவை டிஜிட்டல் இணைப்பு இல்லாதவர்களுக்கு உதவும் வித்யாவின் பல வழிகளாகும். பான்டெமிக் மக்களின் மனப்பான்மையை மாற்றி இருப்பதால், அவர்கள் கற்றுக்கொள்ள பல வழிகளை தேடுவதில் ஆர்வம் காட்டுகின்றனர். பல வகையான மாணவர்கள், அதுவும் சின்னஞ்சிறு நகரத்திலிருந்து இருப்பது அவரிம் பரந்த அணுகுமுறைக்கான சாட்சி.

வித்யா, ஒரு சிறந்த சமூக தொழில் துறை பெண் உரிமையாளராக இருப்பதால், NITI ஆயோகின் தொழில் துறை பெண் உரிமையாளர்கள் மையம் ‘வுமென் டிரான்ஸ்ஃபார்மிங் இந்தியா அவார்ட் 2021' அவர்களுக்கு வழங்கியது. ஆன்லைனில் சங்கீதம் கற்பிப்பதில் சிறப்புமிக்க வேலை செய்த அவருக்கு பல விருதுகள் கிடைக்கப்பெற்றது. CA தொழில் துறை பெண் உரிமையாளர் விருது (2019), தமிழ்நாட்டின் கலைமாமணி விருது (2018), தன்னாக்க விருது (2018), இன்ஸ்பயரிங் தொழில் துறை பெண் உரிமையாளர் GES ஈவென்ட் (சென்னை 2017), சென்னை ஸ்பாட்லைட்டின் ரோட்டரி கிளப் விருது (2016) மற்றும் பிபிசி உலக செய்தியில் அவரைப் பற்றிய சிறப்பம்சம்.

வித்யாவின் வருங்கால லட்சியம், அரசு அல்லது குவாஸி அரசு ஏஜென்சிகள் மற்றும் அரசு பள்ளிகள் அல்லது தனியார் பள்ளிகளுடன் இணைந்து அங்கு வேலை செய்யும் ஆசிரியர்களையும் கொண்டு, இசைக்கு ஆன்லைன் வகுப்புகள் நடத்துவதாகும். அதோடு, மாணவர்கள் அவர்களே கற்க ஏதுவாக கோர்ஸேரா மற்றும் ஸ்வயம் போன்ற இணைய முகப்புகள் உருவாக்க வேண்டும். தன் மாணவர்களுக்கு சாம்பரிலோ அல்லது முறைப்படியற்ற இடத்திலோ கச்சேரிகள் செய்யும் வாய்ப்பு கிடைக்க செய்ய வேண்டும் என்று நம்புகிறார். மன்டலா கலை, மதுபானி ஓவியங்கள் மற்றும் தஞ்சாவூர் கலை ஆகியவற்றையும் தன் அகாடமியில் சேர்க்க விரும்புகிறார். அழிந்துக் கொண்டிருக்கும் நாட்டுப்புற கலைக்கும் உயிர் கொடுக்க வேண்டும் என்பதும் அவரின் விருப்பம். முடிவாக, எது செய்தாலும் அதில் தரம், நிறைவான விளைவு இருக்க வேண்டும் என்றே விரும்புகிறார்.

பாரம்பரிய கலையை சர்வதேச அளவில் எடுத்து சென்று அதில் வெற்றியும் கண்டதில், வித்யாவும் அவரின் அகாடமியும், நிச்சயமாக சாம்பியன்கள் தான்!

மீரா சிவசங்கர்